# யூலை – 27 – சனி

**"எங்கள்மீது சீற்றம் கொண்டீர் இப்பொழுதோ, எங்களை நோக்கித் திரும்பியருளும்" - திபா 60 : 1**

---

## முதல் வாசகம் : விடுதலைப் பயணம் 24 : 3 – 8

அந்நாட்களில் மோசே மக்களிடம் வந்து ஆண்டவர் சொன்ன அனைத்து வார்த்தைகளையும் விதிமுறைகளையும் அறிவித்தார். மக்கள் அனைவரும் ஒரே குரலாக் "ஆண்டவர் கூறிய வார்த்தைகள் அனைத்தையும் நாங்கள் செயல்படுத்துவோம்" என்று விடையளித்தனர். மோசே ஆண்டவரின் வாக்குகள் அனைத்தையும் எழுதி வைத்தார். அதிகாலையில் அவர் எழுந்து மலையடிவாரத்தில் ஒரு பலிபீடத்தையும், இஸ்ரயேலின் பன்னிரண்டு குலங்களுக்காகப் பன்னிரண்டு தூண்களையும் எழுப்பினார். அவர் இஸ்ரயேல் மக்களின் இளைஞர்களை அனுப்பி வைக்க, அவர்களும் ஆண்டவருக்கு எரிபலிகள் செலுத்தினர். மாடுகளை நல்லுறவுப் பலிகளாகவும் ஆண்டவருக்குப் பலியிட்டனர். மோசே இரத்தத்தில் ஒருபாதியை எடுத்துக் கலங்களில் விட்டுவைத்தார். மறுபாதியைப் பலிபீடத்தின்மேல் தெளித்தார். அவர் உடன்படிக்கையின் ஏட்டை எடுத்து மக்கள் காதுகளில் கேட்கும்படி வாசித்தார். அவர்கள், "ஆண்டவர்கூறிய அனைத்தையும் நாங்கள் செயல்படுத்திக் கீழ்ப்படிந்திருப்போம்" என்றனர். அப்போது மோசே இரத்தத்தை எடுத்து மக்கள்மேல் தெளித்து, "இவ்வனைத்து வார்த்தைக்கு மிணங்க, ஆண்டவர் உங்களோடு செய்துள்ள உடன்படிக்கையின் இரத்தம் இதோ" என்றார்.

**பதில்பாடல் :** கடவுளுக்கு நன்றிப்பலி செலுத்துங்கள்.

## நற்செய்தி : மத்தேயு 13 : 24 – 30

அந்நாட்களில் இயேசு அவர்களுக்கு எடுத்துரைத்த வேறு ஓர் உவமை "விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம். ஒருவர் தம் வயலில் நல்ல விதைகளை விதைத்தார். அவருடைய ஆள்கள் தூங்கும்போது அவருடைய பகைவன்வந்து கோதுமைகளுக் கிடையே களைகளை விதைத்துவிட்டுப் போய்விட்டான் பயிர் வளர்ந்து கதிர்விட்டபோது களைகளும் காணப்பட்டன. நிலக்கிழாருடைய பணியாளர்கள் அவரிடம் வந்து, "ஐயா, நீர் உமது வயலில் நல்ல விதைகளை அல்லவா விதைத்தீர்? அதில் களைகள் காணப்படுவது எப்படி? என்றுகேட்டார்கள். அதற்கு அவர், "இது பகைவனுடைய வேலை" என்றார். உடனே பணியாளர்கள் அவரிடம், "நாங்கள் போய் அவற்றைப் பறித்துக் கொண்டு வரலாமா? உம் விருப்பம் என்ன? "என்றுகேட்டார்கள். அவர், "வேண்டாம், களைகளைப் பறிக்கும்போது அவற்றோடு சேர்த்துக் கோதுமையையும் நீங்கள் பிடுங்கிவிடக்கூடும். அறுவடைவரை இரண்டையும் வளரவிடுங்கள். அறுவடைநேரத்தில் அறுவடை செய்வோரிடம், "முதலில் களைகளைப் பறித்துக்கொண்டு வந்து எரிப்பதற்கெனக் கட்டுகளாகக் கட்டுங்கள். கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள்" என்று கூறுவேன்" என்றார்."

**தியானம் :** "கண்ணுக்குக் கண். பல்லுக்குப் பல்" எனப் பழிவாங்கும் அல்லது இருந்த இடமே தெரியாது இல்லாதொழிக்கும் மனோ நிலையில் வாழும் எமக்கு இன்றைய நற்செய்தி வாசகம் எமது பரலோக தகப்பனது எல்லையற்ற பொறுமையையும். அவரது அளவுகடந்த பரிவிரக்கத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. ஆதலால் கிறிஸ்தவர்கள் என எம்மை நாமே பெருமையோடு கூறிக்கொண்டு வாழும் நாம் எவ்வாறான வாழ்க்கை வாழுகின்றோம் என்பதனை வேறுவிதமாகச் சிந்திக்க இன்றைய நற்செய்தி வாசகம் எம்மை அழைக்கின்றது. இன்றைய நற்செய்தியில் "நாங்கள் போய் அவற்றைப் பறித்துக் கொண்டு வரலாமா? உம் விருப்பம் என்ன?" (மத்தேயு 13:27) என்ற வாசகத்திற்கு அமைவாகவே எமது பழிவாங்கும் அல்லது இருந்த இடமே தெரியாது அழித்தொழிக்கும் மனோநிலையோடு கூடிய செயற்பாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றது. அதேவேளையில் "வேண்டாம், களைகளைப் பறிக்கும்போது அவற்றோடு சேர்த்துக் கோதுமையையும் நீங்கள் பிடுங்கி விடக்கூடும்" (மத்தேயு 13:28) எனப்படும் வாசகத்தில் எமது பரலோக தகப்பன் நாம் செய்யும் தவறுகளுக்காக உடனடியாகவே தண்டனை வழங்குபவரல்ல. மாறாக அவர் கருணையும் மிகுந்த இரக்கமும் உடையவர் என்பது மட்டுமல்ல, தம்மீது நம்பிக்கையும் விசுவாசமும் வைத்த நற்கோதுமைகள் போன்று வளரும் தமது பிள்ளைகளுக்கு கூடவே வளரும் கெட்ட பயிர்கள் போன்ற தீயவர்களால் எதுவித தீங்கோ, சேதமோ ஏற்படக்கூடாது என்ற விடயத்திலும் மிகுந்த அக்கறை உடையவராக இருக்கின்றார் என்பதும் தெளிவாகக் காட்டப்படுகின்றது. எம்மிடையே கெட்ட பயிர்கள் போன்ற தீய செயல்களைப் புரிந்து நன்மையான காரியங்களைக் கெடுப்பவர்கள் கூடவே இருப்பது உண்மை என ஏற்றுக்கொள்வோம். ஆயினும் அவ்வாறான தீயவற்றிலிருந்தும் நன்மையான காரியங்களை இறைவன் வேறாகப் பிரித்தெடுத்து அவற்றை ஆசீர்வதித்து நற்பலன் தரும் பயிர்களாக வளரச்செய்வார் என்ற நம்பிக்கையோடு வாழப் பழகிக்கொள்வோம். இதுவே இன்றைய நற்செய்தி நமக்குத் தரும் செய்தியாகும். ஏனெனில் எம்மிடமுள்ள பொறாமையும், கடுஞ்சினமும் எப்போதும் தீவினையையே விளைவிக்கும். நீடித்த பொறுமையும் அமைதியும் நன்மையைக் கொண்டுவரும்.